# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.05/2023** **நாள் :25.01.2023**

**சென்னைக் குடிநீர் வாரிய சிந்தாதிரிப்பேட்டை தலைமை அலுவலகத்தில் புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணி 28.01.2023 சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 11.00 மணி வரை மேற்கொள்ளப்பட உள்ளதால் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படாது**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னைக் குடிநீர் வாரிய சிந்தாதிரிப்பேட்டை தலைமை அலுவலகத்தில் புதுப்பித்தல் பணி நடைபெறுவதை முன்னிட்டு தரவு மையத்தில் (Data Centre) புதிய மின்சார கேபிள் மாற்றி அமைக்கும் பணி 28.01.2023 சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 29.01.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 11.00 மணி வரை மேற்கொள்ளப்பட உள்ளதால் இணையதள வழியாக பெறப்படும் சேவைகளாகிய குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி செலுத்துதல், கட்டணம் செலுத்தி லாரிகள் மூலம் பெறப்படும் குடிநீர், (Dial for Water) புதிய குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு விண்ணப்பித்தல், பொதுமக்கள் குறை தீர்க்கும் மையம் மற்றும் எம்.ஆர்.சி நகரில் தற்போது இயங்கும் தலைமை அலுவலக இணையதள இணைப்பு ஆகிய அனைத்து சேவைகளும் செயல்படாது. மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு தினசரி லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் புதிய மின்சார கேபிள் மாற்றியமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு 30.01.2023 காலை 10.00 மணி முதல் வழக்கம் போல் இணையதள சேவைகள் அனைத்தும் செயல்படும் என குடிநீர் வாரியம் தெரிவித்துக்கொள்கிறது.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்